www.Padasalai.Net

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.**
**ந.க.எண். 26054/டபிள்யு1/இ1/2024, நாள். 24.05.2024**

பொருள்: தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – **01.01.2024** இல் உள்ளவாறு **அரசு /நகராட்சி** மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1)/ அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் – தேர்ந்தோர் பட்டியல் – தயார் செய்யக் கருத்துருக்கள் கோருதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 14, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள். 30.01.2020.
2. அரசாணை (நிலை) எண். 176, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள். 17.12.2021.
3. W.P.No.17632/2022 etc.தொகுப்பு வழக்குகளின் மீதான நீதிமன்ற தீர்ப்பாணை நாள். 29.08.2022.
4. C.P.(civil) Diary No(s).6415/2021 INSLP(c)No.2886/2016 தீர்ப்பாணை நாள். 18.04.2023.
5. சென்னை–6, ஆசிரியர் தேர்வு வாரியம் தலைவருக்காக ந.க.எண்.4965141/CV3–S2/2023 நாள்.13.05.2024

------

01.01.2024 நிலவரப்படியான அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, கீழ்க்காண் விவரங்கள் கோரப்படுகிறது.

**முதுகலை ஆசிரியர்கள் சார்பான விவரங்கள்**

**1.** 2003–2004 ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்து 1.6.2006 முதல் பணிவரன்முறை செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்களில் 01.01.2023 நிலவரப்படியான முன்னுரிமை பட்டியலில் இடம் பெற்று பதவி உயர்வு பெற்றவர்கள் போக எஞ்சியுள்ள முதுகலை ஆசிரியர்கள் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2. 2004–2005 ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட்டு 1.06.2006 முதல் பணிவரன் முறை செய்யப்பட்ட முதுகலைப் பாட

www.Padasalai.Net

ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) ஆகியோரின் தெரிவுப் பட்டியல் மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்தவர்களை மதிப்பெண் அடிப்படையில் சரிபார்த்து முன்னுரிமைப்படி அனுப்ப வேண்டும். (உச்சநீதிமன்ற தீர்ப்பாணையின்படி போட்டித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தர எண் நிர்ணயித்து முதுகலை ஆசிரியர்கள் அனைவருக்கும் 2004–2005 ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் பின்பற்றிடல் வேண்டும்.)

**3.**கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் விவரம்.

4.முந்தைய ஆண்டுகளில் தயார் செய்யப்பட்ட தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெறாமல், **01.01.2024** அன்றைய நிலவரப்படி தயார் செய்யப்படும் தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்கள்.

5.ஏற்கனவே, அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, 2020–இல் தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் (3 Panel Years) நிறைவு செய்துள்ள முதுகலை ஆசிரியர்கள்.

**<u>அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சார்பான விவரங்கள்</u>**

**1.2015–2016 ஆம் ஆண்டு/அதற்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில்** மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு பெற்றவர்களை தவிர மீதமுள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விவரங்கள்.

**2.**ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, 1.1.2020 நிலவரப்படி தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று ஆண்டு தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் ( 3 panel years) நிறைவு பெற்றுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் விவரங்கள்.

www.Padasalai.Net

01.01.2016 –க்குப்பிறகு அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றவர்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்ட W.A.(MD).1468/20 etc., batch casesல் 23.03.2023 நாளிட்ட தீர்ப்பாணை அடிப்படையில் துறையால் தொடரப்பட்டுள்ள உச்சநீதி மன்ற வழக்கு SLP Diary No.47685/2023 இறுதி தீர்ப்பாணை வரப்பெற்ற பிறகே 01.01.2016க்குப்பிறகு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களை அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் முன்னுரிமைப்பட்டியல் தயாரிக்க இயலும் என்பதால் இது குறித்த விபரங்கள் தனியே பின்னர் கோரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 01.01.2024 நிலவரப்படியான அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் முன்னுரிமைப் பட்டியலில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 10.06.2024–க்குள் டபிள்யு–1 பிரிவு மின்னஞ்சலில் (w1dsetn@gmail.com) அனுப்புமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு Tamil nadu Government Gazette Part III section 1(b) date 30.01.2020 இல் அரசாணை நிலை எண். 14 பள்ளிக்கல்வி (பக2(1)) நாள்.30.01.2020 இல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

1. Tamil Nadu Government Office Manual Test
2. Account test for Executive Officers (Or) Account test for Subordinate officers part I
3. Tamil Nadu School Education Department Administrative test Paper –1 and paper– II

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்க கூடாது.

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்று தண்டனை காலம் முடிவடையாத முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்க கூடாது.

www.Padasalai.Net

மேலே குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மற்றும் தண்டனை பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்கப்படும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விரும்பும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் கருத்துருக்களை மட்டும் முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும். அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் **மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பமுடையவர்கள்** சார்பான **கருத்துருக்களை** பள்ளிக் கல்வி இயக்குநருக்கு **பரிந்துரை செய்யப்பட வேண்டியதில்லை**. அத்தகைய தலைமையாசிரியர்களின் விருப்பக் கடிதத்தினை மட்டும் அனுப்பினால் போதுமானது.

மேலும், அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களைப் பொறுத்தமட்டில் அரசாணையின்படி, மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு பதவி உயர்வில் செல்ல அளிக்கப்படும் விருப்பக் கடிதமே இறுதியானது. அதனை மீண்டும் ஒரு முறை மாற்றி அமைத்திட இயலாது. ஆகையினால் மாவட்டக் கல்வி அலுவலராக (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வில் செல்வதற்கு அளிக்கப்படும் விருப்பக் கடிதத்தினை **ஆழ்ந்து சிந்தித்து** சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அளிக்க அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும், மேலும் மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளித்தவர்களுக்கு மாவட்ட கல்வி அலுவலராகவும், அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு கோரும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அரசுமேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியராகவும் பதவி உயர்வு பெற விண்ணப்பங்களை பரிந்துரை செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் சார்ந்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை

www.Padasalai.Net

மேற்கொள்ளப்படும். இதற்காக **31.05.2024** அன்று சிறப்பு முகாம் நடத்தி அறிக்கை அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட விவரங்களை சென்ற ஆண்டு தயார் செய்து அனுப்பப்பட்ட இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு தகுதியுடைய ஆசிரியர்களின் விவரங்களை பூர்த்தி செய்து கவனத்துடன் செயல்பட்டு ஆய்வு செய்து அனுப்புமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு–

1. முதுகலை ஆசிரியரின் விவரங்கள் சார்ந்த படிவம்
2. Access Sheet
3. 2004–2005 இல் தெரிவுப்பட்டியல் போட்டித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெறப்பட்டது.
4. 01.01.2023 நிலவரப்படி எஞ்சியுள்ள முதுகலை ஆசிரியர்களின் முன்னுரிமைப்பட்டியல்.

**ஒம்/–க.அறிவொளி**
**பள்ளிக்கல்வி இயக்குநர்**

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழி)

நகல்: 1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்ககம்,
சென்னை– 600 006 – அவர்களுக்கு தகவலுக்காகப் பணிவுடன் அனுப்பப்படுகிறது.

www.Padasalai.Net

**இணைப்பு–1**

01.01.2024–ல் உள்ளவாறு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக நியமனம் பெறத் தகுதி பெற்றவர்கள் விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆசிரியர் பெயர் | : | | |
| | **(ஆண்/பெண்)** | | | |
| | மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் முழு முகவரியுடன் | | | |
| 2. | **<u>in English</u>**<br>Name of Teacher<br>Designation with Subject<br>Address with pincode | | | |
| 3. | பிறந்த தேதி | | | |
| | தற்போது கற்பித்து வரும் முக்கிய பாடம் (முதுகலை ஆசிரியர் எனில் பணி நியமன ஆணையின் நகல் கண்டிப்பாக இணைக்கவேண்டும் இல்லையெனில் முன்னுரிமை பட்டியலுக்கு பரிந்துரை செய்யக்கூடாது) | : | | |
| | நகல் இணைக்கப்பட்டுள்ளதா ? (ஆம்/இல்லை) | | | |
| 4. | முகஆ/உகஇ–1/உநிப தஆ–ராக பணிவாய்ப்பு பெறப்பட்ட விவரம் (TNPSC/TRB/GO.10A1/Prom/Comps) | | | |
| அ) | முகஆ/உகஇ–1/உ.நி.ப.தலைமை ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள். | | நாள். | |
| | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள். | | | |
| | பணிவரன்முறை ஆணை எண். | | | |
| | தகுதிகாண் பருவம் முடித்த நாள் ஆணையின் எண் மற்றும் நாள் | | | |
| ஆ) | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப் பட்டிருப்பின், தேர்வு செய்யப்பட்ட ஆண்டும், தர எண் (பணிவரன் முறை நாள்) | : | ஆண்டு<br>தர எண் | |
| 5. | கல்வித்தகுதிகள் | முக்கிய பாடம் | தேர்சிபெற்ற ஆண்டு/மாதம் | தேர்வின் பதிவு எண். |
| | பி.ஏ / பி.எஸ்.சி | | | |
| | எம்.ஏ / எம்.எஸ்சி. | | | |
| | பி.ட்டி / பி.எட் | | | |
| | **(வேறு மாநில பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றிருப்பின் மதிப்பீடு செய்யப்பட்ட விவரம் குறிப்பிடவேண்டும்)** | | | |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 6. | துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விவரங்கள் | தேர்ச்சி பெற்ற ஆண்டு / மாதம் | தேர்வின் பதிவு எண். |
| அ | நிர்வாக அலுவலருக்கான கணக்குத் தேர்வு (அல்லது) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 | | |
| ஆ | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு | | |
| இ | பள்ளித்துணை ஆய்வர் தேர்வு ( 3 தாள்கள்) தேர்ச்சி பெற்றிருப்பின் அதன் விவரம்<br>(அல்லது)<br>தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை நிர்வாக தேர்வு தாள் I மற்றும் தாள் II | 1)<br>2)<br>3) | |
| 7. | இதற்கு முன் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு அதனை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உரிமைவிடல் செய்துள்ளாரா? ஆம் எனில், அதன் விவரம் | : | |
| | ஆசிரியரின் கையொப்பம் | | |
| **தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் அனுப்ப வேண்டிய விவரம்** | | | |
| 8. | கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் இவருக்கு அளிக்கப்பட்டிருப்பின் அது குறித்த விவரம் (தண்டனை ஏதும் பெறவில்லை எனில் 'இல்லை' எனக் குறிப்பிடப்பட வேண்டும் | ஆணை எண். மற்றும் தேதி | தண்டனை விவரம் |
| 9. | தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(பி)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விவரம் | : | |
| 10. | இவ்வாசிரியர் பணி மற்றும் நடத்தை குறித்து தலைமை ஆசிரியர் குறிப்புரை / பரிந்துரை | : | |

**<u>சான்று</u>**

கலம் 1 முதல் 12 வரையுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும், இவை பணிப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் உண்மை என்றும் உறுதி அளிக்கிறேன்.

தலைமை ஆசிரியரின் கையொப்பம் (தேதியுடன்)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் **சரியாக** உள்ளது என்றும், அன்னார் பணிநடத்தை நன்று என்றும், சார்ந்த ஆசிரியர் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்கு தகுதியானவர் எனவும் மு.க.ஆ. சார்பான விவரங்கள் தற்போதைய நிலைப்படி டி.ஆர்.பி– யில் பெறப்பட்டுள்ளது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்